**வடக்கு அதிவேக பாதை செயற்திட்டம் - 2014**

வடக்கு அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன முறையே அமுலாக்கல் மற்றும் நிறைவேற்றல் முகவராக உள்ளது. கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தை இணைக்கும் முடிவாக தேசிய அதிவேகப்பாதை வலையமைப்பின் ஒரு பகுதியாக முன் மாதிரியாக இருந்த வடக்கு அதிவேகப்பாதையினை நிர்மாணிப்பதே வடக்கு அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் குறிக்கோளாகவுள்ளது. உத்தேசிக்கப்பட்ட கண்டி அதிவேகப் பாதைக்கு புறம்பான ஒரு பகுதியுடன் கொழும்பு முதல் தம்புள்ள வரை நீடிப்பதில் 191 கிலோமீற்றர்கள் அதிவேகப்பாதையை நிர்மாணிப்பதற்கு 10 பொதிகளைக் இச் செயற்திட்டத்தின் கீழ் கொண்டுள்ளது. செயற்திட்டத்தின் நிதி ஒழுங்கமைப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரையும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இலங்கை அரசினால் அளிக்கப்பட்ட நிதிகளிலிருந்து செயற்திட்டத்தின் பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின்

பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டு பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஏனைய 03 செயற்திட்டங்களிலிருந்து 108 நிலையான சொத்து விடயங்கள் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 5.29 மில்லியன் பெறுமதியான அந்த சொத்துக்களின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள ரூபா 3.8 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களுடன் இணங்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2014 திசெம்பர் 31 வரையிலும் நிதி ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லையெனினும் செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சாத்தியவள கற்கைகள், காணிகளை கையேற்றல் மற்றும் ஏனைய செயற்பாட்டு கிரயங்கள் ஆகிய செயற்திட்ட பூர்வாங்க கிரயங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ரூபா 335.95 மில்லியன் தொகையான முற்பணத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

2013 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதிவேக பாதையின் நிர்மாண பணிகள் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தினால் சுய விருப்பில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான 10 பொதிகளிடையே 04 பொதிகளின் கீழ் வடக்கு அதிவேக பாதையின் வேயாங்கொடை முதல் கலகெதர வரையான நிர்மாணங்களுக்காக 05 ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையுடன், ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்தல் அமைச்சரவையால் 2014 நவம்பர் 12 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் 08 மாதங்கள் கடந்திருந்த போதிலும் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக செயற்திட்டத்தால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நடைபாதை மற்றும் வீதியின் பகுதிகளில் மாற்றங்கள் உட்பட செயற்திட்டத்தின் பிரதான நோக்கெல்லையில் மாற்றங்கள் செய்வதற்கும் மத்திய அதிவேக செயற்திட்டம் என மீள பெயரிடுவதற்கும் செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், அவ்வாறான மாற்றங்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் ரூபா 9.86 மில்லியன் கிரயத்தில் வடக்கு அதிவேக பாதையின் எந்தர்முல்ல தொடக்கம் குருநாகல் வரை மூன்று கட்டங்களில் சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்வதற்கு செயற்திட்டத்தால் வெளிநாட்டு கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பின்னர் அதிவேக பாதையின் எந்தர்முல்ல தொடக்கம் கம்பஹா வரையான பகுதி கடவத்த தொடக்கம் கம்பஹா என மாற்றப்பட்டிருந்தது. ஆதலால் அந்த வீதியின் பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள கற்கையானது வழக்கற்றும் பயனற்றும் போயிருந்தது.

(ஈ) வடக்கு அதிவேக பாதை செயற்திட்டத்தின் காணிகளை கையேற்பதற்காக செயற்திட்டத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் செயற்திட்டத்தால் கைப்பற்றப்படவுள்ள காணிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.